[6th July 1962

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The scheme is under investigation.

(b) Does not arise.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: ஹொகனேக்கல்லில் புதிய அணை கட்டுவது சம்பந்தமாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடந்த ஸோனல் கௌன்ஸில் கூட்டத்தில் மைசூர் அமைச்சர்களோடு பேசப்பட்டதா? அப்படியானால் அவர்கள் கூறிய பதில் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சாதாரணமாக ஸோனல் கௌன்ஸிலில் நடைபெற்ற விஷயங்களை வெளியிடுவதில்லை. அதில் அமைச்சர்கள் என்னென்ன சொன்னார்கள் என்பதைச் சொல்வதில்லை. முடிவுகளைத்தான் சொல்வது வழக்கம். இன்னும் லேட்டஸ்ட் இன்பர்மேஷன் கொடுக்க முடியும். ஜூன் மாதம் 22-ம் தேதி 1962-ல் ஸதர்ன் ஸோனல் கௌன்ஸிலில் பவர் டெவலப்மென்ட் கமிட்டிக் கூட்டத்தில் இருதரப்பு சீப் எஞ்ஜினியர்களும் இதை கூட்டாக பரிசீலனை செய்வது, 'ஜாயின்ட் இன்வெஸ்டிகேஷன்' என்று முடிவு எடுக்கப்பட்டது.

பஸ்களின் வேகத்தை அதிகரித்தல்

* 152 கேள்வி.—திரு. ம. கமலநாதன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்களின் வேகத்தை அதிகரித்து ஓடும் நேரத்தைக் குறைக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. This involves amendment to VIII Schedule to the Motor Vehicles Act, 1939. The question of amending the Schedule is under consideration.

உருளைக்கிழங்கு பயிரிடுதல்

* 153 கேள்வி.—திரு. டி. கர்ச்சா கவுடர்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் உருளைக்கிழங்கிற்கு ஏற்பட்ட 'late blight' என்ற நோயை ஒழிக்க ஸ்காட்லந்திலிருந்து அழைக்கப்பட்ட பிளாக் என்ற நிபுணர் என்னென்ன நோய் தடுப்பு முறைகளை சிபாரிசு செய்தார்?

(இ) அம்முறைகள் கையாளப்பட்டனவா?

(உ) அப்படியானால், பலன் என்ன?

THE HON. SRI P. KAKKAN: (a) The preventive measures suggested by Dr. William Black were:

(i) Regular prophylactic spraying with copper fungicides and adopting field sanitation practices, and